சுற்றறிக்கை எண்.செகுவா/மதொபி/022492/2024, நாள் : 13.08.2024

**சுற்றறிக்கை**

பொருள் : சென்னைக் குடிநீர் வாரியம் – மக்கள் தொடர்பு பிரிவு – சுதந்திர தின விழா – சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைமையகத்தில் வரும் 15.08.2024 அன்று சுதந்திர தின விழா கொண்டாடுதல் – அனைவரும் பங்கேற்கக் கோருதல் – தொடர்பாக.

---

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைமையகத்தில் 15.08.2024 வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு சுதந்திர தின விழா நிகழ்ச்சி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இவ்விழாவில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் காலை 9.30 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்த உள்ளார்கள். மேலும், குடிநீர் வாரிய அலுவலகத்தில் 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்க உள்ளார்கள்.

எனவே, வாரிய பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் 15.08.2024 வியாழக்கிழமை 8.30 மணியளவில் தலைமை அலுவலகத்திற்கு தவறாது வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/– இரா. இராஜகிருபாகரன், 13.08.2024**
**பொது மேலாளர்**

**நகல்:**
அனைத்து துறை தலைவர்கள்
பகுதி / மண்டல பொறியாளர்கள்
நேர்முக உதவியாளர்கள்/மேலாண்மை இயக்குநர்/செயல் இயக்குநர்/
நிதி இயக்குநர்/பொறியியல் இயக்குநர்/தலைமைப் பொறியாளர்கள்/பொது மேலாளர்
செயற்பொறியாளர் (கட்டட பராமரிப்பு) – தக்க நடவடிக்கைக்காக

/உ.ந.உ.ப.அ/

C. Amal 13/8/24

மக்கள் தொடர்பு மேலாளர்